# இயேசு, மரியா, யோசேப்பின் திருக்குடும்பம்

## திருப்பலி முன்னுரை

ஆண்டின் இறுதி வாரம் இது. வழிபாட்டுக் கொண்டாட்டத்திற்கு வந்துள்ள உங்கள் யாவரையும் அன்புடனே வரவேற்கின்றேன்.

திருக்குடும்பத் திருவிழாவை கொண்டாட அழைப்பு பெற்று இருக்கின்றோம்.

நம்முடைய குடும்பங்களுக்கு இறைவன் இந்த ஆண்டு முழுவதும் செய்த நல்ல பல மேலான காரியங்களுக்கு நன்றி கூறுவதோடு, குடும்பத்தை ஒப்புக்கொடுத்து, அவரது ஆசீரை இறைஞ்சுவோம்.

ஆபிரகாம், ஈசாக், சிமியோன், அன்னா இந்த குடும்ப அன்பர்கள் தங்களது வாழ்விலே கொண்டிருந்த நம்பிக்கை, அவர்கள் குடும்பத்தில் பெற்ற நம்பிக்கை தான். வாழ்விலே பெற்ற நம்பிக்கை அவர்களுக்கு நலம் தந்ததோடு, இறைவனது மேலான ஆசீரையும் பெற்றுத் தந்தது.

இன்று குடும்பங்களில், இத்தகைய நம்பிக்கையே விதைக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். அவநம்பிக்கை மேலோங்குவதாலேயே குடும்பங்கள் சிதைவது அதிகமாகின்றது.

குடும்பங்களில் நம்பிக்கை விதைக்கப்பட, உறவுகள் உறுதிப்படவும், உண்மையான அன்பை பகிரவும், வழிபாட்டுக் கொண்டாட்டங்கள், குடும்ப செபங்கள் அரங்கேறவும் வேண்டும். திருக்குடும்ப விழுமியங்கள் நமதாக வேண்டும் என்ற வேண்டுதலோடு பங்கேற்போம். பயன் பெறுவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நன்மையின் நாயகனே இறைவா!

திருஅவை குடும்ப உறவோடு தன் எல்லா மக்களையும் ஒருங்கிணைத்து அழைத்துச் செல்ல, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. நன்மையின் நாயகனே இறைவா!

நாடு முன்னேற, குடும்பங்கள் ஒன்றிணைந்து செல்வது அவசியமானது என்பதனை உணர்ந்து பயணிக்க, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. நன்மையின் நாயகனே இறைவா!

இல்லங்கள் இறைவேண்டலின் இல்லங்களாக அமையவும், முந்தமுந்த உம்மையும், உமது அரசையும் நாடும் இல்லங்களாக வாழ, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. நன்மையின் நாயகனே இறைவா!

திருக்குடும்ப பண்புகளும், விழுமியங்களும் எங்களது குடும்பங்களில் பிரதிப்பலிக்க, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. நன்மையின் நாயகனே இறைவா!

குடும்பங்களில் வாழ்வோர் ஒவ்வொருவரும், பிறருக்கு நம்பிக்கையின் நட்சத்திரமாக விளங்கிட, அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

6. நன்மையின் நாயகனே இறைவா!

குடும்பங்களில் ஒருவரோடு ஒருவர் நலன் பேணவும், அக்கறையோடு கூடிய அன்பினை விதைத்திடவும், அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com